பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 08 சனிக்கிழமை 20.02.2021 கதிர் 338

## மோ. சைக்கிள் விபத்தில் இளம் குடும்பஸ்தர் சாவு!

யாழ்., பருத்தித்துறை - திக்கம் சந்திக்கு அண்மையில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி கடலுக்குள் பாய்ந்ததால் அதில் பயணித்தவர் சாவடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது என ஆரம்பகட்ட விசாரணைகளின் பின்னர் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

2






# எங்கே எங்கள் உறவுகள்? சர்வதேசமே பதில் சொல்!

### வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் மாபெரும் தீச்சட்டிப் போராட்டம்

**வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இன்று கிளிநொச்சியில் மாபெரும் தீச்சட்டிப் போராட்டப் பேரணியை முன்னெடுத்தனர்.**

**வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்து இன்றுடன் 4 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் இந்தத் தீச்சட்டிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

2

## இலங்கைக்கு எதிராக விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### மூத்த சர்வதேச பிரமுகர்கள் கூட்டாக வலியுறுத்து



இலங்கை அதன் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதன் சொந்த நீதி நிறுவனங்களை நாட முடியாத நிலையை உருவாக்கியுள்ளது என்று மனித உரிமைகள் தொடர்பில் குரல் கொடுத்து வரும் உலகளாவிய மூத்த முக்கியஸ்தர்கள்குழுவொன்று தெரிவித்துள்ளது.

2

## யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியினுள் வெளி மாவட்ட பஸ்கள் பிரவேசிக்கத் தடை!

### மீறினால் சட்ட நடவடிக்கை என மேயர் எச்சரிக்கை



யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட வைத்திய சாலை வீதிப் பகுதியில் வெளி மாவட்டத்திற்கான தனியார் மற்றும் அரச பஸ்கள் உள் நுழைவதற்கும் வெளிச் செல்வதற்கும் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது எனத்

2

## முஸ்லிம் நாடுகளின் ஆதரவு இலங்கைக்கே

### தினேஷ் அதீத நம்பிக்கை




கொழும்பு, ஜன.20

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடரில் முஸ்லிம் நாடுகளின் ஆதரவு இம்முறையும் இலங்கைக்குக் கிடைக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன நம்பிக்கை வெளியிட்டார்.

2

## யாழ். பல்கலைக்கு பி.சி.ஆர். இயந்திரம்

### கையளிக்க வருகின்றார் அமெ. தூதுவர்



யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் அமைந்துள்ள பி.சி. ஆர். பரிசோதனை ஆய்வுகூடத்துக்கு யு. எஸ். எயிட் இனால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பி.சி.ஆர். இயந்திரத்தைச் சம்பிரதாய பூர்வமாகக் கையளிக்கும்

2

## மேற்கு முனையம் குறித்தும் போராட்டம் நடத்த தொழிற்சங்கங்கள் அதிரடி முடிவு

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தைப் போன்று மேற்கு முனையம் தொடர்பாகவும் போராட்டங்களை நடத்துவதற்குத் துறைமுக தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

போராட்டங்கள் தொடர்பாக ஏற்கனவே ஜனாதிபதி கோட்டாபய

2




## சஹ்ரானின் போதனையில் பங்கேற்ற பெண்ணொருவர் ரி.ஐ.டியால் கைது!

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாஷிமின் அடிப்படைவாதப் போதனைகளில் கலந்துகொண்ட பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாவனல்லை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயது பெண்ணே நேற்று இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

ஈஸ்டர் தாக்குதலை மேற்கொண்ட சஹ்ரானின் அடிப்படைவாத வகுப்புகளில் கலந்துகொண்ட 6 பெண்கள் கடந்த டிசெம்பர் மாதம் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

நேற்று கைதுசெய்யப்பட்ட பெண்ணின் குடும்ப உறுப்பினர்கள் மாவனல்லை புத்தர் சிலை உடைப்பு சம்பவத்தில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு எதிராக விரைந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் சர்வதேச சமூகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்தக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையர் மிலே் பச்சலெட் இலங்கை தொடர்பில் அண்மையில் விடுத்திருந்த அறிக்கையின் பால் ஐ.நா. உறுப்பு நாடுகள் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் 20 இற்கும் மேற்பட்ட நிபுணர்களும் முன்னாள் தலைவர்களும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கைப்படி, இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களின் பிரதிநிதிகளும் உலகளாவிய, எல்லைகள் கடந்த விசாரணை - அதிகாரத்தின் (நியாயாதிக்கத்தின்) கீழ் நீதியை நாடுவதற்கு சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

குற்றமிழைத்தவர்கள் தண்டனைகளுக்கு உட்படாமல் இருப்பதை தடுப்பதற்கு இலங்கை எதிர்ப்புக்காட்டி வரும் சூழ்நிலையில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போன்ற தற்போதுள்ள சர்வதேச விசாரணைப் பொறிமுறைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டுக்காட்டப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றமிழைத்தவர்கள் என நம்பகமான குற்றச்சாட்டை எதிர்நோக்கியுள்ளோர் மீது தடைகளை அறிவிக்கவும் சிறப்புத் தூதர் ஒருவர் மூலமான உறுதியான கண்காணிப்பையும் அறிக்கையிடலையும் உறுதிப்படுத்தவும் மனித உரிமைகள் ஆணையர் முன்வைத்துள்ள பரிந்துரையை ஆதரிப்பதாகவும் குறித்த சமூகப் பிரமுகர்கள் குழு தெரிவித்துள்ளது.

அயர்லாந்தின் முன்னாள் ஜனாதிபதியும் 'எல்டர்ஸ்' அமைப்பின் தலைவியுமான மேரி ரொபின்ஸன், கொலம்பியாவின் முன்னாள் ஜனாதிபதியும் நோபல் பரிசு வென்றவருமான ஹூவான் மனுவல் சந்தோஸ் ஆகியோரும் இந்த அறிக்கையில் கையொப்பமிட்டுள்ள முக்கிய 20 பிரமுகர்களில் அடங்குகின்றனர்.

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா உருவாக்கிய 'எல்டர்ஸ்' அமைப்பில் இப்போது முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர், தென்னாபிரிக்க நிறவெறிக்கு எதிராக போராடிய பேராயர் டெஸ்மன்ட் டுட்டு, ஐ.நாவின் முன்னாள் தலைமைச் செயலர் பான் கி மூன் உள்ளிட்ட முதுபெரும் தலைவர்கள் பலர் இடம்பெற்றுள்ளனர்.

அத்தோடு 2006 ஆம் ஆண்டில் ஐ.நா. மனித உரிமைகள் சபை நிறுவப்பட்டது முதல் ஆணையர்களாக பணியாற்றியவர்களான லூயிஸ் ஆர்பர், நவநீதம்பிள்ளை, செயித் ராஅத் அல் ஹூசைன் ஆகியோரும் தற்போதைய ஆணையரின் பரிந்துரைகளை வழிமொழிந்துள்ளனர்.

ஐ.நாவின் முன்னாள் துணைத் தலைமைச் செயலர் ஜன் எலியஸ்ஸன், இலங்கையில் ஐ.நாவின் செயற்பாடுகள் பற்றிய உள்ளக மீளாய்வுக்காக தலைமைச் செயலரால் 2012 இல் நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் சார்ல்ஸ் பெட்ரி, இலங்கையின் பொறுப்பேற்றல் தொடர்பில் 2011 இல் விசாரணை நடத்திய நிபுணர் குழுவின் தலைவர் மர்ஸுகி தருஸ்மன் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் இந்தப் பகிரங்கக் கோரிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்.

## எங்கே எங்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தீச்சட்டி பேரணியானது கிளிநொச்சி பிள்ளையார் கோயில் முன்றிலில் ஆரம்பமாகிய நிலையில், கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றிலில் நிறைவடைந்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடர் நடைபெறவுள்ள நிலையில், தமக்கான நீதியை சர்வதேசம் பெற்றுத்தர முன்வர வேண்டும் என வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், எங்கே எங்கே உறவுகள் எங்கே? சர்வதேசமே பதில் சொல், வேண்டும் வேண்டும் உறவுகள் வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிராம மட்ட அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், போக்குவரத்துக் கழகங்கள், அரசியல் பேதமின்றி அனைத்து அரசியல்வாதிகளும் கலந்துகொண்டு தங்களுக்கான நீதி கிடைக்க வலுச் சேர்க்குமாறும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அழைப்பு விடுத்திருந்தனர்.

இதற்கமைய பல்வேறு தரப்பினரின் பங்குபற்றுதலுடன் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## யாழ்ப்பாணம் வைத்தி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வெளிமாவட்டங்களில் இருந்து வருகின்ற பஸ்கள் யாழ். போதனா வைத்தியசாலை வீதியைப் பயன்படுத்தி உள் நுழைவதும் வெளிச்செல்வதும் இன்று முதல் தடைசெய்யப்பட்டுள்ளது. அதனை மீறி வீதியைப் பயன்படுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், இன்று முதல் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு எச்சரிக்கை வழங்கப்படவுள்ளது. அத்துடன் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழக்குப் பதிவு மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச மற்றும் தனியார் பஸ்கள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள வெளிமாவட்ட பஸ் நிலையத்தைப் பாவிப்பதற்கு மறுத்து வருவதையடுத்தே யாழ். மாநகர சபையால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், யாழ். மத்திய நகரப் பகுதியில் நிலவுகின்ற போக்குவரத்து நெரிசல் குறித்த வெளிமாவட்ட பஸ்கள் தரிப்பதனாலேயே ஏற்படுகின்றது. புதிய நடைமுறையைப் பயன்படுத்தி பஸ்களை புதிதாகத் திறக்கபட்ட தரிப்பிடத்தில் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசலைத் தடுக்கலாம் - என்றுள்ளது.

## மேற்கு முனையம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என அகில இலங்கை துறைமுக ஊழியர் சங்கத்தின் செயலாளர் நிரோஷன் ஹொரகானகே தெரிவித்தார்.

இந்திய நிறுவனத்துக்கு கிழக்கு முனையத்தை வழங்குவதற்கு ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்குத் தொழிற்சங்கங்களும், அரசியல் கட்சிகளும் எதிர்ப்பு வெளியிட்டதைத் தொடர்ந்து அந்தத் தீர்மானத்தை அரசு கைவிட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து மேற்கு முனையத்தை இந்தியா மற்றும் ஜப்பான் நிறுவனங்களுக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வழங்குவதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும் மேற்கு முனையத்தையும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு இடமளிக்க முடியாது என்று துறைமுக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

கிழக்கு முனையத்தைப் போன்று மேற்கு முனையமும் முழுமையாக இலங்கை துறைமுக அதிகார சபையின் கீழே இருக்க வேண்டும் எனவும், இதனால் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அதனைக் கையளிக்க முடியாது எனவும் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அவ்வாறு மேற்கு முனையத்தை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுமாக இருந்தால் அதற்கு எதிராக முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து தற்போது தொழிற்சங்கள் கூடி கலந்துரையாடி வருகின்றன என்று அகில இலங்கை துறைமுக ஊழியர் சங்கத்தின் செயலாளர் நிரோஷன் ஹொரகானகே மேலும் கூறினார்.

## யாழ். பல்கலைக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி டெப்லிட்ஸ் அம்மையார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி வைத்திய நிபுணர், பேராசிரியர் எஸ். ரவிராஜிடம் பி.சி.ஆர். இயந்திரத்தைச் சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் எஸ். ரீபவானந்தராஜா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் ஆரம்பித்த காலத்தில் வடக்கில் கொரோனாத் தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்கான வசதிகள் இல்லாத நிலையில், இங்கிருந்து சேகரிக்கப்படும் மாதிரிகளை அநுராதபுரம் மற்றும் தென்னிலங்கையில் அமைந்திருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை ஆய்வுகூடங்களுக்கு அனுப்பி முடிவுகளைப் பெற வேண்டியிருந்தது. இதனால் முடிவுகளைப் பெறுவதில் பெரும் அசௌகரியங்கள் காணப்பட்டதுடன், தாமதமும் ஏற்பட்டது.

இந்நிலையில், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் தன்னிடமிருந்த ஒரேயொரு பி.சி.ஆர். இயந்திரத்தைக் கொண்டு, கடந்த வருடம் ஏப்ரல் மாதமளவில் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள ஆரம்பித்தது. இதனால் வடக்கில் பெறப்பட்ட மாதிரிகளை இங்கேயே பரிசோதித்து, முடிவுகளை விரைவாகப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இதன் பின்னரே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பி.சி.ஆர். பரிசோதனை ஆய்வு கூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

தற்போது யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் உள்ள இரண்டு பி.சி.ஆர். இயந்திரங்களைக் கொண்டு நாளொன்றுக்கு சராசரியாக 300 மாதிரிகளைப் பரிசோதிக்கக் கூடிய வசதிகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மோ. சைக்கிள் விபத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தில் கற்கோவளத்தைச் சேர்ந்த பவிதரன் (வயது - 30) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

இன்று காலை அந்த வீதியூடாகப் பயணித்தவர்கள் பருத்தித்துறை பொலிஸாருக்குவழங்கியதகவலின்அடிப்படையில் அங்கு வந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கொரோனா அச்சம் பலர் நாடு வருகை!

கடந்த 24 மணி நேரத்தில் வெளிநாடுகளில் இருந்து மேலும் 1,080 பேர் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

சீனா, ஐக்கிய அரபு இராச்சியம், டுபாய், கட்டார், குவைட் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து இவர்கள் வந்தடைந்துள்ளனர் என விமான நிலைய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தக் காலப்பகுதியில், கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக 456 பேர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சைக்கிளில் பயணித்தவர் மயங்கி விழுந்து மரணம்!



யாழ். - நல்லூர் கோவில் வீதியில் கொழும்புத்துறையில் இருந்து திருநெல்வேலி சந்தைக்கு மரக்கறி வாங்க சென்ற 75 வயதுடைய முதியவர் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த வேளை மயக்கமடைந்த நிலையில் நிலத்தில் விழுந்து உயிரிழந்துள்ளார் .

கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 75 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். உயிரிழந்தவர் மாரடைப்பினால் உயிரிழந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் மரக்கறி கடை நடாத்துபவர் இன்று காலை வீட்டில் இருந்து மரக்கறி வாங்க திருநெல்வேலி பொதுச் சந்தைக்கு சைக்கிளில் சென்றார் எனவும் அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

## முஸ்லிம் நாடுகளின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாஸா விவகாரம் இதில் தாக்கத்தைச் செலுத்தாது எனவும், முஸ்லிம் நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இது குறித்து தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம் மக்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறிய கருத்து உண்மையே எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதார நிபுணர் குழுவின் பரிந்துரையையே பிரதமர் தெரியப்படுத்தினார் எனவும், இது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



**நமது பார்வை**
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# நீதி விசாரணைகளுக்கு குறுக்கே வராதீர்கள்!

ஆளும் ஆட்சித் தரப்பு பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாண்மைப் போக்கிலேயே செயற்படுகின்றது. இது கண்கூடான உண்மை.

எனினும், அந்த ஆளும் தரப்புடன் சேர்ந்து ஓடி, அத்தரப்பை தாஜா செய்து, ஏதேனும் தமது மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியாதா என நப்பாசையுடன் சில சிறுபான்மை இன மக்களின் தலைவர்கள் சிந்திக்கின்றார்கள்; முயற்சிக்கின்றார்கள். அது தப்பில்லை. ஆனால் அதற்காக தென்னிலங்கையின் பாதம் பணிந்து ஆட்சித் தரப்பின் கால்களைக் கழுவி, அடி பணிவது மட்டுமே ஒரே வழி என்று யாரும் எண்ணி விடக் கூடாது.

யாழ்ப்பாணம் வருகை தந்த சுவிட்ஸர்லாந்தின் புதிய தூதுவர் டொமினிக் ஃபேர்கலரைச் சந்தித்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதி குழுவினர் இங்கு, அவரிடம் தெரிவித்தவை என்ற அடிப்படையில் வெளியான தகவல்கள் அவதானிக்கப்பட வேண்டியவையாக உள்ளன.

“மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக நீதி ஒன்று தேவைதான். ஆனால் அதை மட்டும் வலியுறுத்திக் கொண்டிருக்காது எமது மக்களும் நாட்டினதும் அபிவிருத்தி உள்ளிட்ட ஏனைய விடயங்களையும் முன்னோக்கிக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். மனித உரிமை விடயத்தில் இரண்டு பக்கங்களிலும் தவறுகள் இருக்கின்றன. அதேபோல இரண்டு பக்கங்களிலும் தீவிர போக்குள்ளவர்களும் இருக்கின்றார்கள்” என்று ஈ.பி.டி.பி. தரப்பில் கூறப்பட்டுள்ளது.

தமிழர் தரப்பில் பல பத்தாயிரம் மக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். ஒரு மனிதப் பேரழிவு இனத்தின் மீது திட்டமிட்டுக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. ஆனால் அப்பாவிப் பொது மக்களின் ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமலும், ஓர் அப்பாவி உயிர் கூட இழக்கப்படாமல் இந்த யுத்தம் அரசுப் படைகளால் முடிக்கப்பட்டிருக்கின்றது என்று பொய்ப் பித்தலாட்டக் கருத்தை வெளியிட்டு, தமிழினத்தின் ஆன்மாவையே நோகடித்து வருகின்றது பௌத்த, சிங்களப் பேரினவாத ஆட்சிப்பீடம்.

அடக்குமுறை அட்டகாசத்துக்குக் கீழ் நாட்டின் அபிவிருத்தியும் சமாதான வாழ்வும் சாத்தியமாகா.

அபிவிருத்தியும், வாழ்க்கைத் தர மேம்பாடும் அவசியம்தான். ஆனால் கௌரவமான – மதிப்பார்ந்த – வாழ்வு அதை விட முக்கியமானது. அப்படி வாழ்ந்தால்தான் அது மனித வாழ்வு; மக்கள் வாழ்வு. இல்லையேல் மாக்கள் வாழ்வுதான்.

அத்தகைய கௌரவ வாழ்வை எட்டுவதற்கு நல்லிணக்கமும் புரிந்துணர்வும் இன சௌஜன்யமும் அவசியமானவை. அடக்கி ஆளப்படும் ஒடுக்கு முறையின் கீழ் அது சாத்தியமானதல்ல.

தமிழினத்தின் ஆன்மாவையே சீரழித்த யுத்தக் கொடூரங்களின் வடு, இலகுவில் அகன்று விடப் போவதில்லை. அது ஆழமாகப் பதிந்த கொடூரத் தாக்கம். குரூரப் பட்டறிவு.

கேவலமாகக் காணமலாக்கப்பட்டு, குரூரமாகப் படுகொலை செய்யப்பட்ட பல பத்தாயிரம் தமிழ்ச் சகோதரர்களின் அவலத்தை வெறுமனே மண்ணுக்குள் புதைத்து விட்டு, அதை மறந்து, மூடி மறைத்துவிட்டு அந்த மண்ணில் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் மேம்படும் என்றால் அது படு முட்டாள்தனமன்றி வேறில்லை.

முதலில் மக்களுக்கு – தமிழர்களுக்கு – இழைக்கப்பட்ட கொடூரங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்; உண்மை கண்டறியப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்; அதன் பின்னர் பொறுப்புக்கூறல் நீதி நிலைநாட்டப்பட வேண்டும்; பாதிப்புற்றோருக்கு உரிய இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும்; கடைசியாக மீள நிகழாமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை எடுக்காமல், ஏதோ இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வும், நல்லுறவும் ஏற்பட்டு விட்டதாக பம்மாத்துக் காட்ட முயலக் கூடாது. மனித உரிமைகள் விடயத்தில் இரண்டு பக்கங்களிலும் தவறுகள் இருக்கின்றன என்று கூறுவதன் மூலம் மனித உரிமைகள் மீறல் விடயத்திலிருந்து அரசுத் தரப்புத் தன்பாட்டில் தப்ப முடியாது.

தவறு இரண்டு பக்கங்களிலும் இருக்கட்டுமே. ஒரு பக்கத்தின் தலைமை முற்றாக அழிக்கப்பட்டாலும் மறுபக்கத்தின் தலைமை கட்டளைச் சங்கிலி அடியிலிருந்து மேல் வரை இன்னும் உறுதியாக உள்ளது.

அது, இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு – யுத்தக் குற்றங்களுக்கு – மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களுக்கு – பதில் கூறியேயாக வேண்டும். அழிக்கப்பட்ட மறுபக்கத் தலைமையைக் காட்டி, குற்றமிழைத்த தரப்பு தப்ப முடியாது.

அரசுடன் – ஆட்சித் தரப்புடன் – ஒட்டிக் கொண்டு ஏதேனும் சாதிப்போம் என்று நினைக்கும் தரப்புகள் அதை எண்ணட்டும். அதனைச் சாதிக்க முயலட்டும்.

அதற்காக மோசமான மனிதக் கொடூரங்களை – மனித உரிமை மீறல்களை – மனித குலத்துக்கு எதிரான நாசங்களை – புரிந்தோரை நியாயப்படுத்த முயலக் கூடாது.

# விவசாயிகளின் தேவைகளை நிறைவேற்றிவிட்டு நெல்லைக் கொள்வனவு செய்வதால் நல்லது!

## செல்வம் எம்.பி. ஆலோசனை



விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் அரசாங்கம் செய்து கொடுத்த பின் விவசாயிகளிடம் இருந்து தேவையான நெல்லைக் கொள்வனவு செய்வது பொருத்தமாக இருக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் இன்று (சனிக்கிழமை) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

விவசாயிகள் அனைவரும் இரவு பகல் பாராமல் தூக்கத்தைத் தொலைத்து கடன் பட்டு நகைகளை அடகு வைத்து விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களிடம் உரமானியத்தைக் காரணம் காட்டி குறிப்பிட்ட அளவு நெல் கொள்வனவு செய்வது விவசாயிகளை மீண்டும் எழ்மை நிலைக்குத் தள்ளிவிடும் செயற்பாடாகும்.

விவசாயிகளின் நலனில் அக்கறை இருந்தால் உரமானியத்தைக் காரணம் காட்டி அவர்களிடமிருந்து நெல் கொள்வனவு செய்வது தற்போது கைவிடப்பட வேண்டும்.

ஏனெனில் விவசாய பயிர்ச் செய்கையின் ஆரம்ப காலங்களில் பெய்த மழை காரணமாக அதிக அளவில் அழிவுகளும் இழப்புக்களும் விவசாய செய்கைக்கு ஏற்பட்டுள்ளது.

எதிர்பார்த்த அளவில் விளைச்சலும் இல்லை. நெல் சந்தைப்படுத்தல் சபை கேட்பதுபோல் காய வைக்கும் அளவிற்கு தள வசதிகள் இல்லை. அதிகளவான விவசாயிகள் வீதி ஓரங்களிலே நெல்லை காய வைக்கும் நிலையை நாங்கள் பார்க்கின்றோம்.

அத்துடன், அதிகளவான நெல்லைப் பாதுகாத்து வைக்கும் களஞ்சியங்கள் இல்லை. மேலும் விவசாயிகள் நெல் வைக்கப்பட்ட இடத்திலிருந்து நெல் கொடுக்கப்படும் இடங்கள் வெகு தூரத்தில் உள்ளன. இதனால் போக்கு வரத்து செலவு இரட்டிப்பாகின்றது.

இதேநேரம் தனியார் அறுவடை செய்யும் வயல் அருகில் வந்து பச்சையாக நெல் கொள்வனவு செய்வதால் விவசாயிகளின் சுமை ஓரளவிற்கேனும் குறைக்கப்படுவதாகப் பெருமளவிலான விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள்.

எனவே, விவசாயிகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்த பின்னர், விவசாயிகளிடம் இருந்து தேவையான நெல்லைக் கொள்வனவு செய்வது பொருத்தமாக இருக்கும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# பாக். பிரதமர் இம்ரான்கானின் இலங்கை விஜய நிகழ்வுகள்

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் 23ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதன்போது அவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் இலங்கை விஜயத்தின் போது அவர் கலந்துக்கொள்ளவுள்ள நிகழ்வுகள் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அவர்,

2021.02.23 – பிற்பகல் 4.15 – பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையவுள்ளமையுடன், இதன்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பாகிஸ்தான் பிரதமரரை வரவேற்கவுள்ளார். பின்னர் இராணுவத்தினரின் மரியாதை அணிவகுப்பு இடம்பெறும்.

2021.02.23 – மாலை 6.00 – அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பு

2021.02.23 – மாலை 6.30 – அலரி மாளிகையில் அமைச்சர்கள் ஒன்றிணைந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தல்.

2021.02.24 – முற்பகல் 10.30 – ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் சந்திப்பு.

2021.02.24 – முற்பகல் 11.30 – சங்ரில்லா ஹோட்டலில் இடம்பெறும் வணிகம் மற்றும் முதலீடு நிகழ்வில் கலந்துகொள்ளல்.

2021.02.24 – பிற்பகல் 12.30 – சபாநாயகர் மற்றும் விளையாட்டு அமைச்சரால் வழங்கப்படும் விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளல்

2021.02.24 – பிற்பகல் 12.30 – நாவல – கிரிமண்டல மாவத்தையில் உயர் மட்டத்திலான மைதானம் ஒன்றை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்.

2021.02.24 – பிற்பகல் 3 .00 – கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் வெளியேறவுள்ளார்.

# வலிந்து காணாமலாக்கப்பட்ட மகனை தேடியலைந்த தாய் கவலையுடன் சாவு

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பில் உறுப்பினராக இணைந்து, தனது மகனை தேடி வந்த தாயார் ஒருவர், சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.



கைவேலி – புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயாரான சுந்தரலிங்கம் கனகமணி என்ற தாயாரே சுகவீனம் காரணமாக கடந்த வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனான சுந்தரலிங்கம் சுரேஷ்குமார், கடந்த 2009 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இறுதி யுத்தத்தின்போது, காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்.

அந்தவகையில் அன்றுமுதல், தனது மகனைத் தேடிவந்த தாயார் இறுதியில் மகனை கண்டுப்பிடிக்க முடியாத நிலையில் உயிரிழந்துள்ளார்.

இலங்கை அரச படைகளாலும், துணை இராணுவக்குழுக்களாலும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வதேச நீதி வேண்டி கடந்த 2012 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களில் ஈடுபட்டு வந்த தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நீதியை வேண்டிய போராட்டத்தில் ஈடுபட்டு வந்த பல நூற்றுக்கணக்கான தாய்மார்கள், தந்தையர்கள் உயிரிழந்துள்ள நிலையில் குறித்த தாயாரும் உயிரிழந்துள்ளார்.

மேலும் அவரின் இழப்பு, அவரது குடும்பத்தாருக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் அமைப்புக்கும் பேர் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிதி ஆயோக் நிர்வாகக் கவுன்சில் கூட்டம் பிரதமர் தலைமையில் இன்று நடக்கிறது



நிதி ஆயோக்கின் நிர்வாகக் கவுன்சில் கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் இன்று நடக்கிறது. காணொலிக் காட்சி வாயிலாக நடைபெறும் இக்கூட்டத்தில், வேளாண்மை, உள் கட்டமைப்பு, உற்பத்தி, மனிதவள மேம்பாடு, சேவை, சுகாதாரம் மற்றும் ஊட்டசத்து போன்ற அம்சங்கள் விவாதிக்கப்படவுள்ளது.

பிரதமர், முதலமைச்சர்கள், யூனியன் பிரதேசங்களின் துணை நிலை ஆளுநர்கள் இதில் உறுப்பினர்களாக உள்ளனர். லடாக் முதன்முறையாக இக்கூட்டத்தில் பங்கேற்கிறது. நிர்வாக கவுன்சிலில் முன்னாள் உறுப்பினர்கள், மத்திய அமைச்சர்கள், நிதி ஆயோக் துணைத் தலைவர், தலைமை நிர்வாக அதிகாரி, உறுப்பினர்கள் மற்றும் மத்திய அரசின் மூத்த அதிகாரிகளும் கலந்து கொள்ள விருக்கின்றனர். இதனிடையே, நிர்வாக கவுன்சில் கூட்டத்தை மம்தா பானர்ஜி புறக்கணிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.

# தேர்தல் கூட்டணி குறித்த முக்கிய அறிவிப்பு நாளை வெளியிடுகிறார் கமல்ஹாசன்



கமல்ஹாசன் மக்கள் நீதி மய்யம் கட்சியை கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதி மதுரையில் தொடங்கினார்.

கட்சியின் 4 ஆம் ஆண்டு தொடக்க விழா நாளை (ஞாயிறு) நடைபெற உள்ளது. இதையொட்டி பெரிய அளவில் மாநாடு நடத்த திட்டமிட்டனர். ஆனால் மாநாட்டுக்கு பொலிஸார் அனுமதி வழங்கவில்லை.

எனவே அடுத்த மாதம் 7 ஆம் திகதி மாநாடு நடத்த முடிவு செய்துள்ளனர்.

கட்சியின் தொடக்க விழாவை அரங்க நிகழ்ச்சியாக நடத்துகின்றனர். நாளை காலை தாம்பரம் அருகே உள்ள சாய்ராம் பொறியியல் கல்லூரி உள் அரங்கத்தில் கமல் தலைமையில் விழா நடைபெறுகிறது.

சட்டமன்ற தேர்தலில் மக்கள் நீதி மய்யம் எடுக்க வேண்டிய நிலைப்பாடுகள் பற்றி நாளைய கூட்டத்தில் விவாதிக்கின்றனர். ஏற்கனவே ஆம் ஆத்மி கட்சியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பாக அந்த கட்சியின் மாநில தலைவர் கடந்த வாரம் கமல்ஹாசனை சந்தித்து பேசினார். டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுடனும் கூட்டணி தொடர்பாக கமல் ஆலோசனை நடத்தி உள்ளார்.

நாளை தொடக்க விழா நிகழ்ச்சிகள் நிறைவடைந்ததும் மாலையில் பத்திரிகையாளர்களை கமல் சந்திக்கிறார். அப்போது தேர்தலில் மக்கள் நீதி மய்யம் யாருடன் கூட்டணி? எத்தனை தொகுதிகளில் போட்டியிடுவது? போன்ற முக்கியமான அறிவிப்புகளை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கிறது.

## சார்ஜாவில் இருந்து கேரளாவிற்கு விமானத்தில் இந்திய ரூ.2.9 கோடி தங்கம் கடத்தல்; 5 பேர் கைது

சார்ஜாவில் இருந்து கேரள மாநிலம் கோழிக்கோட்டிற்கு விமான சேவை நடைபெறுகிறது. இந்த விமானத்தில் சார்ஜாவில் இருந்து தங்கம் கடத்திக் கொண்டு வரப்படும் சம்பவங்கள் அடிக்கடி நடந்து வருகின்றன.

இந்நிலையில் நேற்று அந்த விமானத்தில் வந்த பயணிகளை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது சார்ஜாவில் இருந்து வந்த 5 பயணிகள் தங்களது பைக்குள் மறைத்து வைத்து தங்கத்தை கடத்திக்கொண்டு வந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

கேரள மாநிலம் நாதாபுரத்தைச் சேர்ந்த முஸ்தபா (வயது45) என்பவர் 1.67 கிலோவும், கோழிக்கோட்டை சேர்ந்த திலுலால்(33) என்பவர் 799 கிராமும், மிஜால்(25) என்பவர் 1.56 கிலோவும், காசர்கோட்டை சேர்ந்த நிஷாத்(33) என்பவர் 775 கிராமும், மலப்புரத்தைச் சேர்ந்த ரியாஷ்(32) என்பவர் 1.69 கிலோவும் தங்கத்தை கடத்தி கொண்டு வந்தனர்.

அவர்களை சுங்கத்துறை அதிகாரிகள் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட 5 பேரிடம் இருந்து மொத்தம் 4.377 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. அவற்றின் மதிப்பு இந்திய ரூ.2.9 கோடி ஆகும். கைதானவர்களிடம் சுங்கத்துறை அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# அமெரிக்காவில் புதிய குடியேற்ற மசோதா எட்டு லட்சம் இந்தியர்கள் பயனடைவர்

அமெரிக்க நாடாளுமன்றத்தில் புதிய குடியேற்ற மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனால் லட்சக்கணக்கான இந்தியர்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த குடியேற்ற மசோதாவின் முக்கிய நோக்கம் முறையான ஆவணங்கள் இல்லாமல் அமெரிக்காவில் வேலை பார்த்து வரும் 1 கோடியே 10 லட்சம் வெளிநாட்டினருக்கு குடியுரிமை வழங்குவதாகும்.

அத்துடன் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு நிரந்தர குடியுரிமைக்காக வழங்கப்படும் கிரீன் கார்டு வழங்குவதில் உள்ள சிக்கல்களை களைவது மற்றும் எச்1 பி விசாதாரர்களுக்கு பணி அங்கீகாரம் வழங்குவது ஆகியவையும் இந்த மசோதாவின் முக்கிய அம்சமாகும்.

இந்த மசோதா சட்டமானால் அமெரிக்காவில் தகவல் தொழில் நுட்பத் துறையில் வேலை பார்த்து வரும் சுமார் 8 லட்சம் இந்தியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF MEDICINE

### Inauguration of Academic Programme

The Academic Programme for the New Batch (2019 A/L) of Medical Students will commence on **Monday, 15th March 2021**. An Inauguration Programme will be held on 15th March 2021 at 8.30 am in the Hoover Auditorium, Faculty of Medicine.

Only enrolled students will be allowed inside the Faculty of Medicine, University of Jaffna.

**This will be implemented strictly due to the prevailing COVID crisis.**

**Address:** Faculty of Medicine,
University of Jaffna
Adiyapatham Road,
Kokuvil,
Jaffna.

- Students those who are outside of the Jaffna Peninsula have to report on 5th of March 2021.
- The hostel accommodation for those students will be provided since 5th of March 2021

**Registrar**
**University of Jaffna**



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

### 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா
### 24, 25, மாசி, 2021

**பட்டம் பெறும் மாணவர்களுக்கான அறிவித்தல்**
**பட்டமளிப்பு வைபவத்தின் போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதார - பாதுகாப்பு நடைமுறைகள்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா, மாசி மாதம், 24, 25 ஆம் திகதிகளில், பல்கலைக்கழகத்தின் உள்ளக விளையாட்டரங்கில் ஆறு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

பட்டமளிப்பு விழாவின் போது, கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைத் தடுக்கும் முகமாகப் பின்வரும் நடைமுறைகள் மிகவும் இறுக்கமாகப் பின்பற்றப்படும் என்பதை அறியத் தருகிறேன்.

- ஒரே தடவையில் ஆகக் கூடியளவு 150 பேர் மாத்திரமே பங்குபற்ற முடியும். அதற்கேற்ற வகையில் 150 பேர் மாத்திரம் ஒரே தடவையில் அமர்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாணவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள் எவரும் பல்கலைக்கழக வளாகத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
  - முன்னைய அமர்வில் பங்கு பற்றியவர்கள் வெளியேறிச் சென்ற பின்னர் மட்டுமே அடுத்த அமர்வுக்கு உரியவர்கள் மண்டபத்தினுள் அனுமதிக்கப்படுவார்கள்.
  - மாணவர்கள் தங்களுடன் தனிப்பட்ட படப்பிடிப்பாளர்களை அழைத்து வருவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- ஒவ்வொரு அமர்வின் போதும், மண்டபத்தினுள் நுழையும் சகலரது பெயர், பாலினம், வயது, தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி, தொடர்பு (கைத்தொலைபேசி) இலக்கம் உட்பட்ட விபரங்கள் மண்டப நுழைவாயிலில் வைத்துப் பதிவு செய்யப்படும்.
- அத்துடன் மண்டபத்தினுள் நுழையும் சகலருக்கும் உடல் வெப்பநிலை பரிசோதிக்கப்படும், காய்ச்சல் போன்ற நோய் நிலை, அறிகுறிகள் காணப்படுபவர்கள் மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
- மண்டபத்தினுள் நுழையும் சகலரும் தமது கைகளைக் கழுவுவதற்கான வசதிகள் மண்டப நுழைவாயிலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் கைகளைக் கழுவிய பின்னர் உள் நுழைவது கட்டாயமானதாகும்.
- மண்டபத்தினுள் முகக்கவசம் அணிந்து உள் நுழைவது கட்டாயமாகும் என்பதுடன், தொடர்ந்து முகக் கவசம் உரிய முறையில் அணிந்திருப்பது அவசியமாகும்.
- இரண்டு நபர்களுக்கிடையிலான சமூக இடைவெளியாக ஒரு மீற்றர் தூரம் பேணப்படுதல் வேண்டும்.
- நிகழ்வு இடம்பெறும் சுற்றாடலில் உள்ளும், வெளியும் உணவுப் பொருள்கள், நீராகாரங்கள் எந்தவொரு வடிவத்திலும் கையாளப்படுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

- பதிவாளர் -

# பருவநிலை மாற்றம் ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைந்தது



பருவநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைந்துள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கார்பன் வெளியேற்றம் போன்ற காரணங்களால் புவி வெப்பமயமாவதை தடுப்பதற்கான ஒப்பந்தத்தில் 200 நாடுகள் கையொப்பமிட்டன.

இந்த ஒப்பந்தம் காரணமாக கூடுதல் செலவு ஏற்படும் என்று கூறி, அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வெளியேறினார்.

இந்த நிலையில் புதிய அதிபராக பதவியேற்ற முதல் நாளிலேயே, பருவநிலை மாற்றம் ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைவதற்கு ஜோபைடன் உத்தரவிட்டார்.

அதன்படி ஒப்பந்தத்தில் மீண்டும் இணையும் நிகழ்ச்சி காணொலி மூலம் நடைபெற்றது. விஞ்ஞானிகள் மற்றும் பல்வேறு நாடுகளின் தூதர்களும் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

# முதன்முதலாக படம் பிடிக்கப்பட்டுள்ள மஞ்சள் நிறத்தில் உள்ள பென்குயின்

உலகிலேயே முதன்முறையாக முழுவதும் மஞ்சள் நிறத்தினாலான பென்குயின் படம் பிடிக்கப்பட்டுள்ளது.

அண்டார்க்டிக்கா அருகில் உள்ள தெற்கு ஜார்ஜியா கடல் பகுதியில் பறவைகள் ஆய்வாளர் ஒருவர் தனது ஆவணப்படத்தை எடுத்துக் கொண்டிருந்த போது, அங்கு முழுவதும் மஞ்சள் நிறத்தினாலான பென்குயின் ஒன்றைக் கண்டார்.

அதனுடன் வழக்கமான நிறத்தில் உள்ள எம்பரர் பெங்குயின் ஒன்றும் உலா வருவதைக் கண்ட அவர் இரண்டையும் புகைப்படம் எடுத்துள்ளார்.



ஏனைய உயிரினங்களில் அல்பினோ எனப்படும் வெள்ளை நிறமிகள் இருப்பதைப் போல முதன்முதலாக பென்குயினிலும் பார்க்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா விதி மீறல் முத்தம் கேட்ட காவலர்



தென் அமெரிக்க நாடான பெருவில் கொரோனா அபராதம் விதிக்காமல் இருக்க பெண்ணிடம் முத்தம் வாங்கிய காவல்துறை அதிகாரி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

கொரோனா பாதிப்பு காரணமாக அந்நாட்டு தலைநகர் லிமாவில் பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தடையை மீறி இளம்பெண் ஒருவர் காரில் சென்றுள்ளார். இதனைக் கண்ட காவலர் ஒருவர் அவருக்கு அபராதம் விதிக்க முயன்றார்.

ஆனால் அந்தப் பெண்ணிடம் பணம் இல்லாததால் முத்தம் ஒன்றைக் கேட்டு வாங்கினார். இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவியதால் அந்த காவல் அதிகாரி பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# இந்தோனேசிய கடற்கரையில் கரை ஒதுங்கிய திமிங்கலங்கள்

இந்தோனேசிய கடற்கரையில் உயிரிழந்த நிலையில் ஏராளமான திமிங்கலங்கள் கரை ஒதுங்கின.

ஜாவா தீவில் உள்ள மதுரா கடற்கரையில் கரை ஒதுங்கிய 46 திமிங்கலங்கள் உயிரிழந்துவிட்டன.

உயிருடன் இருந்த மூன்று திமிங்கலங்களை மட்டும் மீனவர்கள் கூட்டமாக சேர்ந்து கடலில் இழுத்து விட்டனர். திமிங்கலங்களின் இறப்புக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டுவருகிறது.



# சீனாவைத் தொடர்ந்து அடுத்த வைரஸ் ஆப்பிரிக்காவிலிருந்து பரவ வாய்ப்பு



சீனாவின் வூகான் சந்தையில் இருந்து கொரோனா வைரஸ் பரவியதைப் போல அடுத்த வைரஸ் ஆபிரிக்காவில் இருந்து பரவ வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

வூகான் சந்தையில் பல வன உயிரினங்கள் உயிருடன் பிடிக்கப்பட்டு உணவாக்கப்பட்டதால் கொரோனா பரவியதாகக் கூறப்படும் நிலையில், ஆபிரிக்க நாடான நைஜீரியாவிலும் அதுபோன்று ஒலுவு என்ற பெயரில் சந்தை செயற்பட்டு வருவது தெரியவந்துள்ளது.

சீனாவைப் போலவே இங்கும் விலங்குகள், வௌவால்கள், குரங்குகள் ஏராளமாகப் பிடிக்கப்பட்டு உயிருடன் இருக்கும் போதே கொதிநீரில் மூழ்கடிக்கப்பட்டு உணவாகப் பரிமாறப்படுகிறது. இதற்காக சில உயிரினங்கள் சித்ரவதை செய்யப்படும் வீடியோவும் வெளியாகி உள்ளது.

இதையடுத்து சில உயிரினங்கள் மீட்கப்பட்டாலும் மக்களின் அறியாமையால் திருட்டுத்தனமாக வனஉயிரின வியாபாரம் தொடர்கிறது.

# செவ்வாயில் நாசாவின் பெர்சிவரன்ஸ் எடுத்த படம்!



செவ்வாயின் வளிமண்டலத்திற்குள் நுழைந்த பெர்சிவரன்ஸ், அங்கு தரையிறங்கியமையை, ஏழு நிமிட பயங்கரம் என விஞ்ஞானிகள் வர்ணிக்கின்றனர். அந்த 7 நிமிடங்களில் கரணம் தப்பினால் மரணம் என்பதற்கேற்ப, ஆய்வூர்தி விழுந்து நொறுங்கியிருக்கக் கூடிய வாய்ப்புகள் இருந்தன. ஆனால், திட்டமிட்டபடி பெர்சிவரன்ஸ் வெற்றிகரமாக தரையிரங்கியதோடு, தரையைத் தொடுவதற்கு சற்றுமுன் எடுத்த செல்ஃபியை பூமிக்கு அனுப்பியுள்ளது.

கேபிள்களால் பிணைக்கப்பட்டு செவ்வாயின் பரப்பில் ஆய்வூர்தி பக்குவமாக தரையிறங்குவது வண்ணப் புகைப்படத்தில் பதிவாகியுள்ளது. இத்தகையதொரு செல்ஃபி என்பதும், இவ்வளவு தெளிவான குளோஸ்அப் புகைப்படம் விண்வெளி வரலாற்றில் முதல் முறை என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# அபுதாபியில் காரில் இருந்தவாறே கொரோனா தடுப்பூசி போடலாம்

அபுதாபி பகுதியில் கொரோனாத் தொற்று பரவலை தடுக்கும் வகையில் தடுப்பூசி போடும் பணியானது முடுக்கி விடப்பட்டுள்ளது. இதற்காக தனியார் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தடுப்பூசி போடும் மையமானது, மக்கள் சிரமமின்றி வந்து போட்டுக்கொள்வதற்கு வசதியாக பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டு வருகிறது.

இதன் ஒருபகுதியாக பொதுமக்கள் காரில் இருந்தவாறே கொரோனாத் தடுப்பூசி போட்டுக்கொள்ளும் வகையில் புதிய வசதி சுகாதாரத்துறை சார்பில் செய்யப்பட்டுள்ளது. இதற்காக அபுதாபியில் அமைக்கப்பட்டுள்ள மையமானது காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை செயல்படும். தினமும் 700 பேர் வரை தடுப்பூசி போடக்கூடிய வகையில் இந்த மையத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போது காரில் இருந்தவாறே தினமும் சராசரியாக 600 பேர் தடுப்பூசி போட்டுச் செல்கின்றனர். இங்கு தடுப்பூசி போட வருபவர்களின் விவரங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு, 20 நிமிடத்தில் அவர்களுக்கு தடுப்பூசி போடப்படுகிறது.

இந்த மையத்துக்கு காரில் வரும் பொதுமக்களிடம் முதலில் அமீரக அடையாள அட்டையை, மையத்தின் பாதுகாவலர் சரி பார்ப்பார். பின்னர் அவர்களை மையத்துக்குள் செல்ல அனுமதிப்பார். அதன் பின் மருத்துவ ஊழியர்கள் ஆவணங்களை சரிபார்த்து, பரிசோதனை செய்த பின்னர் தடுப்பூசி போடப்படும்.



காரில் இருந்தவாறே தடுப்பூசி போடும் பணிகள் காரணமாக பொதுமக்களின் நேரம் வெகுவாக மிச்சப்படுத்தப்படுகிறது.

வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் இருதய நோய் உள்ளவர்களுக்கு இந்த தடுப்பூசி போடுவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

அடுத்த மாத இறுதிக்குள் (மார்ச்) ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருக்கும் மக்கள் தொகையில் 50 சதவீதம் பேருக்கு தடுப்பூசி போடப்பட்டிருக்க வேண்டும் என்ற இலக்கினை மையமாக வைத்து இந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நேற்று இந்த தடுப்பூசி போடும் மையத்தை அபுதாபி சுகாதாரத்துறையின் தலைவர் அப்துல்லா பின் முகம்மது அல் ஹமெத் பார்வையிட்டார். அப்போது, அங்கு பணிபுரிந்து வரும் ஊழியர்களுக்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

# சவுதி மலை பிராந்தியத்தில் பனிப்பொழிவு; குளிரால் ஒட்டகங்களும் நெருக்கடியில்

அமெரிக்காவைப் போலவே சவுதி அரேபியாவின் சில இடங்களிலும் பனிப்பொழிவு அதிகரித்துள்ளது. அந்நாட்டின் வடமேற்கில் உள்ள தார் மலைப்பகுதியில் கடந்த சில நாட்களாக பனிப்பொழிவு அதிகரித்துள்ளது.

நாட்டின் பிற பகுதிகளில் வெயிலின் ஆதிக்கம் உள்ள நிலையில் தார் மலை பிராந்தியதில் கொட்டித்தீர்க்கும் பனி, சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

இந்நிலையில் தார் மலை பிராந்தியத்தில் கொட்டும் பனியால் கடும் குளிர் நிலவுவதால் மக்கள் வீடுகளில் இருக்குமாறு அந்நாட்டு வானிலை மையம் அறிவுறுத்தி உள்ளது.

மக்கள் வீடுகளில் இருக்க வெட்டவெளியை தங்கும் இடமாக கொண்ட ஒட்டகங்கள் பனியில் நனையும் நிலை உருவாகி உள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஜெனிவா பிரேரணை வரைவு வெளியானது சர்வதேச நீதிமன்றப் பரிந்துரை இல்லை!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்படவுள்ள இலங்கை தொடர்பான தீர்மானத்தின் வரைவு வெளியாகியுள்ள நிலையில், அதில் சர்வதேச நீதிமன்றம் குறித்த பரிந்துரை இடம்பெறவில்லை.

இலங்கை தொடர்பான தீர்மானத்தின் உத்தேச வரைவு சர்வதேச நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் உள்ளடக்கங்கள் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த வரைவில் தமிழர் தரப்பில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சர்வதேச நீதிமன்றம் தொடர்பான விடயங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

## தீர்மானத்தின் வடிவம்

**இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் மனித உரிமைகள் பேரவை,**

பிபி 1: ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் நோக்கங்கள் மற்றும் கொள்கைகளால் வழிநடத்தப்பட்டு, மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை மீண்டும் உறுதிப்படுத்துதல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் பிற தொடர்புடைய கருவிகளை நினைவுபடுத்துதல்,

பிபி 2: இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை 19/2, 22/1, 25/1, 30/1, 34/1 மற்றும் 40/1 நினைவு கூர்ந்து.

பிபி 3: இலங்கையின் இறையாண்மை, சுதந்திரம், ஒற்றுமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது,

பிபி 4: ஒவ்வொரு மாநில மரியாதையின் முதன்மை பொறுப்பு, மனித உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுவதுடன், அனைத்து மனித உரிமைகள் மற்றும் அதன் முழு மக்கள்தொகையின் அடிப்படை சுதந்திரங்களையும் முழுமையாக அனுபவிப்பதை உறுதிசெய்து,

பிபி 5: இலங்கையில் அதிக உயிரிழப்புகள் மற்றும் காயங்களை ஏற்படுத்திய ஏப்ரல் 2019இல் நிகழ்ந்த பயங்கரவாத செயல்கள் தொடர்பில் கண்டறிதல்.

பிபி 6: நவம்பர் 2019 மற்றும் ஆகஸ்ட் 2020 இல் சுதந்திரமான மற்றும் வெளிப்படையான ஜனநாயகத் தேர்தல்களை நடத்தியதை ஒப்புக்கொள்வது.

பிபி 7: இலங்கை அரசியலமைப்பின் 20ம் திருத்தத்தை நிறைவேற்றுவதையும் செயல்படுத்துவதையும் கவனத்தில் எடுத்துக்கொள்வதுடன், ஜனநாயக நிர்வாகத்தின் முக்கியத்துவத்தையும் முக்கிய நிறுவனங்களின் சுயாதீன மேற்பார்வையையும் வலியுறுத்துகிறது,

மேலும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துதல் உள்ளிட்ட உள்ளாட்சி நிர்வாகத்தை மதிக்க அரசாங்கத்தை ஊக்குவித்தல், இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் மூலம் அனைத்து மாகாண சபைகளும் திறம்பட செயல்பட முடியும்,

பிபி 8: அமைதியான மற்றும் ஒருங்கிணைந்த நாட்டில், மதம், நம்பிக்கை அல்லது இனத் தோற்றம் போன்ற எந்தவேறுபாடும் இல்லாமல் அனைத்து இலங்கையர்களும் தங்கள் மனித உரிமைகளை முழுமையாக அனுபவிக்க உரிமை உண்டு என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

பிபி 9: உட்கட்டமைப்பை புனரமைத்தல், பணமதிப்பிழப்பு செய்தல், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தல் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதில் இலங்கை அரசு மேற்கொண்ட முன்னேற்றத்தை ஒப்புக்கொள்வது, இந்த பகுதிகளில் மேலும் முயற்சிகளை ஊக்குவித்தல்,

பிபி 10: திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப உதவிகளில் மனித உரிமைகள் ஆணைகள் மற்றும் வழிமுறைகள் உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் முகவர்களின் உதவியைப் பெற இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை வரவேற்கிறது.

பிபி 11: பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சர்வதேச சட்டத்தின் கீழ், குறிப்பாக சர்வதேச மனித உரிமைச் சட்டம், சர்வதேச அகதிகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் மாநிலங்களின் கடமைகளுக்கு இணங்க வேண்டும் என்பதையும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

பிபி 12: பொறுப்புணர்வை உறுதிப்படுத்துவதற்கும், நீதிக்கு சேவை செய்வதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வுகளை வழங்குவதற்கும், மனித உரிமை மீறல்கள் மீண்டும் வருவதைத் தவிர்ப்பதற்கும், நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கும், கடந்த காலத்தை கையாள்வதற்கான ஒரு விரிவான அணுகுமுறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துதல்.

பிபி 13: கடந்தகால துஷ்பிரயோகங்கள் மற்றும் மீறல்கள் ஆகியவற்றை சுயாதீனமான, பக்கச்சார்பற்ற மற்றும் வெளிப்படையானதாக இருக்கும்போது சிறந்த முறையில் நிவர்த்தி செய்வதை அங்கீகரித்தல் பாதிக்கப்பட்டவர்கள், பெண்கள், இளைஞர்கள், பல்வேறு மதங்கள், இனங்கள் மற்றும் பிரதிநிதிகள் மற்றும்



ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் மக்கள் உள்ளிட்ட அனைத்து தொடர்புடைய பங்குதாரர்களின் பார்வைகளையும் உள்ளடக்கிய ஆலோசனை மற்றும் பங்கேற்பு முறைகளைப் பயன்படுத்துங்கள்.

பிபி 14: மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களுக்கு காரணமானவர்கள் மீது வழக்குத் தொடர அவர்களின் பொருத்தமான கடமைகளுக்கு இணங்க பொறுப்பை நினைவுபடுத்துதல்,

பிபி 15: இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் பணிகள் பாராட்டுதலுடன் குறிப்பிடுகின்றன.

OP1: ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அதன் 43வது அமர்வில் வழங்கிய வாய்வழி புதுப்பிப்பு மற்றும் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் அலுவலக அறிக்கையை அதன் 46வது அமர்வில் வரவேற்கிறது.

OP2: இலங்கை அரசாங்கத்திற்கும் 2015 மற்றும் 2019 இற்கு இடையில் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கும் இடையிலான நேர்மறையான ஈடுபாட்டை வரவேற்கிறது,

இதுபோன்ற ஈடுபாட்டைத் தொடர வலியுறுத்துகிறது மற்றும் மனித உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் பரிந்துரைகளை அமுல்படுத்த இலங்கைக்கு அழைப்பு விடுக்கிறது

OP3: காணாமல்போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் அடைந்த முன்னேற்றத்தை ஒப்புக்கொள்கிறது மற்றும் இந்த நிறுவனங்களுக்கு ஆதரவைப் பேணுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது, அவற்றின் சுயாதீனமான மற்றும் பயனுள்ள செயற்பாட்டைப் பாதுகாத்தல், இரு அலுவலகங்களுக்கும் போதுமான கட்டளைகளையும் தொழில்நுட்ப வழிகளையும் வழங்குவதன் மூலம் அவர்களின் ஆணைகளை திறம்பட நிறைவேற்ற அனுமதிக்கிறது, அவற்றை அனுமதிக்கிறது பாதிக்கப்பட்ட பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கான இடைக்கால நிவாரண நடவடிக்கைகளை, பாலின கவனம் செலுத்துவதோடு, காணாமல் போனவர்களின் குடும்பங்கள் அவர்களின் தலைவிதியையும், இருக்கும் இடத்தையும் அறிந்து கொள்ளும் வகையில் பலவிதமான காணாமல் போன வழக்குகளைத் தீர்ப்பது;

OP4: செப்ரெம்பர் 2015 OISL அறிக்கையில் சிறப்பிக்கப்பட்டுள்ளபடி, தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கும் ஒரு விரிவான பொறுப்புக்கூறல் செயல்முறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது;

OP5: உள்நாட்டு பொறிமுறைகள் மூலம் பொறுப்புணர்வின் தொடர்ச்சியான குறிப்பைக் குறிப்பிடுகிறது மற்றும் உள்நாட்டு விசாரணை ஆணையம் 22 ஜனவரி 2021 அன்று அறிவித்தது. சுதந்திரம் மற்றும் கடந்தகால மனித உரிமை மீறல்களுக்கு அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களுக்கு பொறுப்புக்கூறலைத் தொடர ஒரு ஆணையும் இல்லை.

OP6: பொறுப்புணர்வை முன்னெடுக்கும் நோக்கில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் அது தொடர்பான ஆதாரங்களை பாதுகாத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்வதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கிறது, தகவல் மற்றும் ஆதாரங்களை ஒருங்கிணைப்பதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் திறனை வலுப்படுத்த முடிவு செய்கிறது.

மனித உரிமைகள் மீறல்கள் அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களுக்கான எதிர்கால பொறுப்புக்கூறல் செயல்முறைகளுக்கான சாத்தியமான உத்திகளை உருவாக்குதல், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களுக்காக வாதிடுவது மற்றும் உறுதியான அதிகார வரம்புடன் உறுப்பு நாடுகளில் தொடர்புடைய நீதித்துறை நடவடிக்கைகளை ஆதரித்தல்;

OP7: கடந்த கால போக்குகள் குறித்த வெளிப்படையான அக்கறை, இது இலங்கையில் மோசமடைந்து வரும் மனித உரிமை நிலைமைகளின் தெளிவான எச்சரிக்கை அறிகுறிகளைக் குறிக்கிறது, இதில் சிவில் அரசாங்க செயற்பாடுகளை விரைவாக இராணுவமயமாக்குதல், நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் பதவி உயர்வுக்கு பொறுப்பான முக்கிய நிறுவனங்கள் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலுக்கான அரசியல் தடைகள், அடையாள வழக்குகளில், மதம் அல்லது நம்பிக்கையின் சுதந்திரத்திற்கான உரிமையை மோசமாக பாதிக்கும் கொள்கைகள், சிவில் சமூகத்தின் கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல் மற்றும் ஜனநாயக இடத்தை சுருக்கி, தன்னிச்சையான தடுப்புக்காவல்கள் , சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற இழிவான அல்லது தண்டனை மற்றும் பாலின மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகள் பற்றிய குற்றச்சாட்டுகள், மேலும் இந்த போக்குகள் சமீபத்திய ஆண்டுகளில் செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட ஆனால் முக்கியமான ஆதாயங்களை மாற்றியமைக்க அச்சுறுத்துகின்றன மற்றும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மீண்டும் மீண்டும் நிகழும் அபாயத்தை ஏற்படுத்துகின்றன.

COVID – 19 தொற்றுநோய் மதம் அல்லது நம்பிக்கையின் சுதந்திரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது மற்றும் முஸ்லிம் சமூகம் அனுபவிக்கும் ஓரங்கட்டப்படுதல் மற்றும் பாகுபாட்டை அதிகப்படுத்தியுள்ளது என்பதையும், COVID – 19 இலிருந்து இறந்த அனைவருக்கும் தகனங்களை கட்டாயப்படுத்த இலங்கை அரசு எடுத்த முடிவையும் OP8 மேலும் வெளிப்படுத்துகிறது. முஸ்லிம்களையும் பிற மதங்களின் உறுப்பினர்களையும் தங்களது சொந்த அடக்கம் செய்யும் மத சடங்குகளை செய்வதிலிருந்து தடுத்துள்ளது, மேலும் மத சிறுபான்மையினரை அளவுக்கு மீறி பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது மற்றும் துன்பம் மற்றும் பதற்றங்களை அதிகப்படுத்தியுள்ளது.

OP9: உடனடி, முழுமையான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணையை உறுதி செய்ய இலங்கை அரசாங்கத்திடம் அழைப்பு விடுக்கிறது, உத்தரவாதம் அளிக்கப்பட்டால், மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்கள் தொடர்பான அனைத்து குற்றச்சாட்டுகளையும் வழக்குத் தொடரவும், நீண்டகால அடையாளச் சின்ன வழக்குகள் உட்பட,

OP10: தேசிய மனித உரிமைகள் ஆணையம், காணாமல்போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீடு வழங்குவதற்கான அலுவலகம் ஆகியவற்றின் திறம்பட மற்றும் சுயாதீனமான செயற்பாட்டை உறுதிப்படுத்த இலங்கை அரசாங்கத்தையும் கோருகிறது;

OP11: சிவில் சமூக செயற்பாட்டாளர்களை பாதுகாக்கவும், எந்தவொரு தாக்குதல்களையும் விசாரிக்கவும், சிவில் சமூகம் தடையின்றி, பாதுகாப்பின்மை மற்றும் பழிவாங்கல்களிலிருந்து விடுபடக்கூடிய பாதுகாப்பான மற்றும் செயல்படுத்தக்கூடிய சூழலை உறுதிசெய்யவும் இலங்கை அரசாங்கத்தின் மீது மேலும் அழைப்பு விடுக்கிறது.

OP12: பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இலங்கை அரசு மறுஆய்வு செய்யுங்கள், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான எந்தவொரு சட்டமன்றமும் அதன் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டக் கடமைகளுக்கு இணங்குவதை உறுதி செய்க.

OP13: அனைத்து மத சமூகங்களும் தங்கள் மதத்தை வெளிப்படுத்தும் திறனை ஊக்குவிப்பதன் மூலம் மத சுதந்திரத்தையும் பன்மைத்துவத்தையும் வளர்க்கவும், சமூகத்திற்கு வெளிப்படையாகவும் சமமாகவும் பங்களிக்கவும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.

OP14: நிலுவையில் உள்ள கோரிக்கைகளுக்கு முறையாக பதிலளிப்பது உட்பட சிறப்பு நடைமுறைகள் கட்டளைதாரர்களுடன் தொடர்ந்து ஒத்துழைக்க இலங்கை அரசை ஊக்குவிக்கிறது.

OP15: இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனையுடனும் மேற்கூறிய நடவடிக்கைகளைச் செயல்படுத்த ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்க உயர் ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் தொடர்புடைய சிறப்பு நடைமுறைகளை வைத்திருப்பவர்களை ஊக்குவிக்கவும்.

OP16: இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை, அதன் முன்னேற்றம் மற்றும் பொறுப்புக்கூறல் உள்ளிட்ட கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடலை மேம்படுத்தவும், மனித உரிமைகள் பேரவையில் அதன் 49வது அமர்வில் எழுதப்பட்ட புதுப்பிப்பை முன்வைக்கவும், ஒரு விரிவான அறிக்கையும் உட்பட உயர் ஸ்தானிகர் அலுவலகத்தை கோருகிறது. அதன் 51வது அமர்வில் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்கான கூடுதல் விருப்பங்கள், இரண்டும் ஊடாடும் உரையாடல்களில் விவாதிக்கப்பட வேண்டும் .

– என அந்த உத்தேச வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# போராட்டத்தில் பங்கேற்றோரை தண்டிப்பதை விடுத்து மக்களின் தேவைகளைப் புரிந்து செயற்படுத்துங்கள்!

## சாணக்கியன் பொலிஸாருக்கு அறிவுரை



போராட்டத்தில் பங்கேற்றவர்களைத் தண்டிப்பதை விடுத்து, மக்களின் தேவை என்னவென்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் உள்ள எட்டு பொலிஸ் நிலையங்களில் இருந்துவந்த பொலிஸ் உத்தியோகத்தர்களால் இரா.சாணக்கியனிடம் நேற்று (வெள்ளிக்கிழமை) வாக்குமூலம் பெறப்பட்டது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தை முன்னெடுத்தமை தொடர்பாக பொலிஸ் நிலையங்கள் ஊடாக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இந்த வாக்குமூலங்கள் பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், இதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போது சாணக்கியன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஜனநாயகப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லும் நடவடிக்கை இந்த நாட்டில் ஜனநாயகம் இல்லையென்பதை உறுதிப்படுத்தும் செயற்பாடாகவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்திற்குச் சென்றிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாக்குமூலங்களை பதிவு செய்தனர்.

வடக்கில் வல்வெட்டித்துறை, கிளிநொச்சி, மாங்குளம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் இருந்தும் கிழக்கில் வாழைச்சேனை, மூதூர், காத்தான்குடி, கல்முனை, சம்மாந்துறை ஆகிய பொலிஸ் நிலையங்களில் இருந்தும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அங்கு சென்றிருந்தனர்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தின்போது நீதிமன்ற கட்டளை மீறப்பட்டதா, பொதுமக்களுக்கு போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டதா, கொரோனா அச்சுறுத்தல் உள்ள நிலையில் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதா போன்ற பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டு வாக்குமூலங்கள் புதிவு செய்யப்பட்டன.

முற்பகல் 11 மணி தொடக்கம் மாலை நான்கு மணி வரையில் இவ்வாறு வாக்குமூலங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசிலிருந்து என்னை விலக்குவார்களா? தெரியாது என்கிறார் விமல் வீரவன்ஸ!



நான் ஒருபோதும் அரசாங்கத்தை விட்டு வெளியேறமாட்டேன். ஆனால், அரசாங்கம் என்னை நீக்குமா என்பது தொடர்பில் எனக்குத் தெரியாதென அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் விமல் வீரவன்ஸ மேலும் கூறியுள்ளவை வருமாறு -

தற்போதைய அரசாங்கம் ஆரோக்கியமான முறையில் முன்னேறும் என்று நம்புகின்றேன்.

மேலும், சில சிக்கலான சூழ்நிலைகளை அகற்றவும் நாட்டு மக்களால் வழங்கப்பட்ட ஆணையை முன்னெடுத்துச்செல்லவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதேவேளை நான், அரசியலுக்கு பிரவேசித்த நாள் முதல் தேசிய வளங்களை பாதுகாப்பதன் அவசியம் தொடர்பாக வலியுறுத்தி வருகின்றேன்.

மேலும் தேசிய வளங்களை விற்பனை செய்வதற்கு எதிராகவும் குரல்கொடுத்து வருகின்றேன்.

இதேவேளை நான் அரசாங்கத்தை விட்டு வெளியேற மாட்டேன். ஆனால் அரசாங்கம் என்னை நீக்குமா என்று எனக்குத் தெரியவில்லை. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தடுப்பூசி போடுவதற்கான கால அவகாசம் நீடிப்பு!

கொழும்பு, ஜன. 20

கொரோனாத் தடுப்பூசியைச் செலுத்தத் தவறியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், தடுப்பூசி செலுத்துவதற்காக கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய கொவிட் – 19 தடுப்புச் செயலணியால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நாடாளுமன்றப் படைக்களச் சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, எதிர்வரும் 23, 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் ஒக்ஸ்ட்போர்ட் அஸ்ட்ரா செனேகாஃகொவிசீல்ட் தடுப்பூசிகளைச் செலுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், குறித்த காலப்பகுதியில் கொழும்பு நாரஹேன்பிடியில் அமைந்துள்ள இராணுவ வைத்தியசாலையில் காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் வாரத்தில் கொழும்பிற்கு வருகை தந்து நாடாளுமன்றக் கூட்டத்தொடர்களில் கலந்துகொள்ளவுள்ள நிலையில், கொவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை எண்ணெய் குழ ஒப்பந்தம் ரத்தாகவில்லை என்கிறது இந்தியா

திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் களஞ்சிய தொகுதியை கூட்டாக அபிவிருத்தி செய்து, இயக்குதல் தொடர்பாக இந்தியா - இலங்கை இடையிலான உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டதாக சில ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகளில் உண்மையில்லை என இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இந்திய உயர் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

2021 பெப்ரவரி 17ஆம் திகதியன்று நடைபெற்ற நிகழ்வொன்றில் மின்சக்தி அமைச்சர் நிகழ்த்திய உரையை இந்த அறிக்கைகள் சரியான முறையில் பிரதிபலிக்கவில்லை. இந்நிலையிலேயே இந்த விடயத்தை ஊடக சந்திப்பொன்றின் மூலமும் அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

இவ்வாறு அமைச்சரின் ஊடக சந்திப்பில் கூறப்பட்டமை போலவே, 2017 இன் புரிந்துணர்வு உடன்படிக்கை உட்பட ஏற்கனவே அமுலில் இருக்கும் இருதரப்பு உடன்படிக்கைகளின் பிரகாரம் குறித்த எண்ணெய் களஞ்சியத் தொகுதியை கூட்டாக அபிவிருத்தி செய்து, இயக்குவதற்கு பரஸ்பரம் ஏற்புடையதான முறைமைகள் தொடர்பாக இரு அரசாங்கங்களும் ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக உத்தியோகபூர்வமான கலந்துரையாடல்களை நடத்துவதற்கும் அதன் பெறுபேறுகளை பரஸ்பர நலன்களின் அடிப்படையில் துரிதமாக அமுல்படுத்துவதற்கும் இந்தியா ஆவலுடன் உள்ளது. - என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை



**மணமகன் விவரம்**
பிறந்த திகதி - 1989.06.08
மதம் - இந்து V
நட்சத்திரம் - பூசம்
பாவம் - 41
கல்வி - HNDA பட்டதாரி
தொழில் - கனடா PR நல்ல வேலை
எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண்.

**மணமகள் விவரம்**
பிறந்த திகதி - 1990.06.10
மதம் - இந்து V
நட்சத்திரம் - பூராடம்
செவ் - 8 இல்
பாவம் - 54
கல்வி - பட்டதாரி
தொழில் - கனடா PR நல்ல வேலை
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகன்.

யாழ் காலைக்கதிரில் காலை, மாலைப் பதிப்பிலும் முகநூலின் ஊடாகவும் மணமக்கள் விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.
அலுவலக நேரம் - எல்லா நாள்களும் காலை 8.30 தொடக்கம் 5.30 வரை.
பதிவுக் கட்டணம் 1000 + 300
Facebook - Kalyanamalaivada.com
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
076 885 6925
077 857 8528

வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும்
புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும்
2021 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான
வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகள் ஆரம்பமாகிவிட்டன.
பரீட்சை நாள் – ஞாயிற்றுக்கிழமை
பரீட்சை நிலையம் – நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்பாக)
பரீட்சை நேரங்கள் – காலை 6.00 - 8.15, காலை 8.30 - 10.45, காலை 11.00 - 1.15, மதியம் 1.30 - 3.45, மாலை 4.00 - 6.15
விரும்பிய நேரங்களில் பரீட்சைகள் எழுதலாம்
தரம் 5 மூன்றாவது பரீட்சை 21.02.2021 , தரம் 4 இரண்டாவது பரீட்சை 21.02.2021
பரீட்சைப் பெறுபேறுகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.
“வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு” 0775388471 0773126807

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.02.2021இல் வெளியிடப்பெற்றது.